## “பைத்தியம்” என்பது
## ஒரு வியாதியா? அல்லது சாபமா?

இன்றைய நாட்களில் பைத்தியகாரர்கள் அதிகமாக காணப்படுகிறார்கள். அநேகர் பைத்தியம் என்று சொல்வதற்கு பதிலாக “மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார்” என்பார்கள். சிலர் “சித்தபிரமை” என்று கூறுவார்கள். வேறு சிலர் அதிக படிப்பினாலே “புத்தி சுவாதீனமாகிவிட்டது” என்பார்கள். எதுவாயினும் எல்லாமே ஒன்றுதான்.

சில வசதி படைத்தவர்கள் இப்படிப்பட்டவர்களை தங்களின் வீடுகளிலே அடைத்து வைத்து இருப்பார்கள். வேறு சிலர் புண்ணிய ஸ்தலம் என்று சொல்லுகிற இடங்களில் வெகு தூரத்திற்கு அப்பால் கொண்டு போய் விட்டு விடுவார்கள். எதுவாயினும் நிலைமையில் மாற்றம் இருப்பது இல்லை என்பதுதான் உண்மை.

சரி ? “பைத்தியம்” என்பது வியாதியா ? அல்லது சாபமா ? என்று சற்று சிந்திப்போம். எந்த ஒரு கொடிய வியாதிக்காரனும் மருத்துவரிடத்திலோ அல்லது மற்றவர்களிடத்திலோ தன்னுடைய வேதனையையோ, வியாதியையோ தெரிவிப்பான். சுகம் பெற வேண்டும் என்று விருப்பம் உடையவனாய் இருப்பான். ஆனால் பைத்தியகாரர்கள், தான் சுகமாக வேண்டும் என்று விரும்பமாட்டார்கள். தங்களுக்கு உண்டான வேதனையை மருத்துவரிடத்திலோ அல்லது மற்றவர்களிடத்திலோ தெரிவிக்க மனமில்லாதவர்களாய் இருப்பார்கள். நாம் சொல்வது அவர்களுக்கு புரியாது.அவர்கள் கூறுவது மற்றவர்களுக்கு விளங்காது. ஆகவே இது ஒரு வியாதி அல்ல. இது ஒரு “சாபம்” என்பதை அறிந்துக் கொள்ள வேண்டும்.

வியாதியாய் இருந்தால் மருத்துவரிடம் செல்லலாம். சாபமாக இருந்தால் முதலில் ஏன் இந்த சாபம் ஏற்படுகிறது என்று சற்று ஆராய்ந்து பார்ப்போம். சாபம் என்பது தொடர்ந்து வரக்கூடியது.

முதலாவது, கிறிஸ்தவ புனித பைபிள் புதிய ஏற்பாட்டில் ரோமர் என்ற நிரூபத்தில் 1ஆம் அதிகாரம் 18–23 வரையுள்ள வசனத்தில் இருந்து சில காரியங்களை காண்போம்.

அழிவில்லாத தேவனுடைய மகிமையை (சாயலை) அழிவுள்ள மனுஷர்கள் (அதாவது பூமியிலே மரித்துப்போன சில மகாத்துமாக்கள், தலைவர்கள்) இவர்களுக்கு ஒப்பாகவும், பறவைகள், மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினதினால் அவர்கள் ஞானிகளாய் இருந்தாலும் அவர்கள் இருதயம் உணர்வில்லாமலும், இருதயம் இருளடைந்தும், அவர்கள் சிந்தனைகளில் வீணராயும், தங்களை ஞானிகள் என்று சொல்லிக் கொண்டாலும் பைத்தியக்காரர் ஆகிவிட்டார்கள் என்றும் புனித பைபிள் திட்டவட்டமாக கூறுகிறது.

இரண்டாவதாக, புனித பைபிள் I கொரிந்தியர் 1ஆம் அதிகாரம் 18ஆம் வசனத்தில் இருந்து இன்னும் சில காரியங்களை ஆராய்வோம்.

இயேசு கிறிஸ்துவின் சிலுவையைப் பற்றிய உபதேசம் அதாவது இயேசு கிறிஸ்து மனிதனுடைய பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டு மரித்தார், இரத்தம் சிந்தினார். அந்த இரத்தத்தினாலே மனிதனின் பாவம் மன்னிக்கப்படும். மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தருளினார். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்ற இந்த சிலுவையின் உபதேசத்தை அநேக ஞானிகள், அறிவாளிகள் இதை “பைத்தியம்” என்று கூறுகிறார்கள். ஆகவே, அவர்கள் பைத்தியகாரராய் மாறுகிறார்கள். அத்துடன் தாங்கள் சந்ததிக்கும் இந்த சாபத்தை சேர்த்து வைக்கிறார்கள். ஆயினும் “பைத்தியம்” என்று சொல்லும் சிலுவையின் உபதேசத்தை ஏற்றுக் கொண்டால் மட்டுமே இந்த சாபமான “பைத்தியம்” மாறும் என்று புனித பைபிள் எச்சரித்துக் கூறுகிறது.

மூன்றாவதாக, பெருமை உள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார் என்று புனித பைபிள் யாக்கோபு 4 ஆம் அதிகாரம் 6ஆம் வசனம்

கூறுகிறது. மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும் என்று புனித பைபிள் நீதிமொழிகள் 29 ஆம் அதிகாரம் 23ஆம் வசனம் கூறுகிறது. புனித பைபிள் எரேமியா 9 ஆம் அதிகாரம் 23–24ஆம் வசனத்தில் இருந்து இப்படியாக கூறுகிறது. ஞானி தன் ஞானத்தைக் குறித்தும், பலசாலி தன் பலத்தைக் குறித்தும், செல்வந்தன் தன் செல்வத்தைக் குறித்தும் பெருமை பாராட்ட வேண்டாம் என்றும், இந்த உலகத்திலே தயவையும், நீதியையும், நியாயத்தையும் செய்கிற இயேசு கிறிஸ்துவின் சிலுவையை குறித்த உபதேசத்தையே, அதாவது நீங்கள் பைத்தியக்கார உபதேசம் என்று கூறுகிற அந்த கிறிஸ்துவையே அறிந்து கொண்டு இந்த சாபமான பைத்தியத்திற்கு விலக முடியும்.

நான்காவதாக, இன்னும் சிலர் இப்படிப்பட்டவர்களுக்கு போதுமான உணவு கொடாமலும், அவர்களை பராமரிக்காமலும், தனியே அடைத்து வைத்து அவர்களை “கருணைக் கொலை” செய்து விடுகிறார்கள். இவ்வாறு “கருணைக் கொலை” செய்வதினால் உபத்திரவம் நீங்கி விட்டதாக எண்ணுகிறார்கள். ஆனால் மேலும், மேலும் சாபம் கூடுகிறது என்பதை அறியாமலிருக்கிறார்கள்.

ஆகவே, இந்த சாபத்தில் இருந்து விடுபட ஒரே வழி இயேசுவே, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவம், சாபத்தில் இருந்து நம்மை விடுதலையாக்கும். இயேசுவே வழி, சத்தியம், ஜீவனுமாயிருக்கிறார்.

இந்த சத்தியத்தை அறிந்து கொள்ள உங்களுக்கு உதவி தேவையெனில் எங்களோடு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**HOUSE OF BREAD CHURCH**

#33, Anna Nagar, Srirangam Tiruchirapalli - 620 006, Tamil Nadu.

Office Phone: +91 431 2430335 / 2430720. www.houseofbread.in / pastor@houseofbread.in

**குறிப்பு :-**

இதை வாசிக்கும் அன்பர்களே, ஒரு வேளை இது உங்களுக்கு தேவையில்லாவிட்டால், தேவைப்படுகிற எந்த குடும்பத்திற்காகவது இதைக் கொடுத்து உதவி புரிவீர்களாக!

# பைத்தியம் என்பது வியாதியா? அல்லது சாபமா?



House of Bread Church

கூறுகிறது. மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும் என்று புனித பைபிள் நீதிமொழிகள் 29 ஆம் அதிகாரம் 23ஆம் வசனம் கூறுகிறது. புனித பைபிள் எரேமியா 9 ஆம் அதிகாரம் 23–24ஆம் வசனத்தில் இருந்து இப்படியாக கூறுகிறது. ஞானி தன் ஞானத்தைக் குறித்தும், பலசாலி தன் பலத்தைக் குறித்தும், செல்வந்தன் தன் செல்வத்தைக் குறித்தும் பெருமை பாராட்ட வேண்டாம் என்றும், இந்த உலகத்திலே தயவையும், நீதியையும், நியாயத்தையும் செய்கிற இயேசு கிறிஸ்துவின் சிலுவையை குறித்த உபதேசத்தையே, அதாவது நீங்கள் பைத்தியக்கார உபதேசம் என்று கூறுகிற அந்த கிறிஸ்துவையே அறிந்து கொண்டு இந்த சாபமான பைத்தியத்திற்கு விலக முடியும்.

நான்காவதாக, இன்னும் சிலர் இப்படிப்பட்டவர்களுக்கு போதுமான உணவு கொடாமலும், அவர்களை பராமரிக்காமலும், தனியே அடைத்து வைத்து அவர்களை “கருணைக் கொலை” செய்து விடுகிறார்கள். இவ்வாறு “கருணைக் கொலை” செய்வதினால் உபத்திரவம் நீங்கி விட்டதாக எண்ணுகிறார்கள். ஆனால் மேலும், மேலும் சாபம் கூடுகிறது என்பதை அறியாமலிருக்கிறார்கள்.

ஆகவே, இந்த சாபத்தில் இருந்து விடுபட ஒரே வழி இயேசுவே, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவம், சாபத்தில் இருந்து நம்மை விடுதலையாக்கும். இயேசுவே வழி, சத்தியம், ஜீவனுமாயிருக்கிறார்.

இந்த சத்தியத்தை அறிந்து கொள்ள உங்களுக்கு உதவி தேவையெனில் எங்களோடு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**HOUSE OF BREAD CHURCH**

#33, Anna Nagar, Srirangam Tiruchirapalli - 620 006, Tamil Nadu.

Office Phone: +91 431 2430335 / 2430720. www.houseofbread.in / pastor@houseofbread.in

**குறிப்பு :-**

இதை வாசிக்கும் அன்பர்களே, ஒரு வேளை இது உங்களுக்கு தேவையில்லாவிட்டால், தேவைப்படுகிற எந்த குடும்பத்திற்காகவது இதைக் கொடுத்து உதவி புரிவீர்களாக!

# பைத்தியம்

## என்பது வியாதியா அல்லது சாபமா?



House of Bread Church